LIBRARY
1 4 FEB 1966
STATE LEGISLATURE, M

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 5th November 1965.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

உறையூரில் புதை பொருள் ஆராய்ச்சி

*286 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா :—

உறையூரில் புதை பொருள் ஆராய்ச்சி நடத்தும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. Sir.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசாங்கம் இதுபோன்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறதா ? அப்படியானால் எந்தெந்த இடங்களில் ஈடுபட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, உறையூர், பழைய சங்க காலத்திலிருந்து சிறப்புப் பெற்ற ஒரு நகரம் ஆகும். அதுவும் காவிரிக்கரையில் இருக்கக்கூடிய காரணத்தினால் அது புதையுண்டு போயிருக்கிற சாத்தியம் இருக்கிறது. ஆகவே, இங்கே புதை பொருள் ஆராய்ச்சி செய்வதற்கு என் தயக்கம் காட்டவேண்டும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னை பல்கலைக் கழகம் இதை கவனித்து வருகிறது.

மதுரையில் ஸ்டேடியம்

*287 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : } திரு. வை. சங்கரன் : } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) மதுரையில் விளையாட்டரங்கு (ஸ்டேடியம்) கட்டும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.